# JAI NAGAR DEVELOPMENT ASSOCIATION

(ப.எண். 321/1988) எண். 10, 5வது தெரு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை-600106

<u>சுற்றறிக்கை எண்: 6 / 2012 - 13 நாள் 10.03.2013</u>

அன்பார்ந்த பெரியோர்களே, நண்பர்களே,

வெள்ளி விழா கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக பெண்களுக்கான போட்டிகள், மழையின் காரணமாக தள்ளிவைக்கப்பட்டு கடந்த 03.03.2013 (ஞாயிறு) அன்று மிக சிறப்பாக நடைபெற்றன. பெண்கள் ஊக்கத்துடன் மிக உற்சாகமாக பங்கேற்றார்கள். காலையில் ரங்கோலி மற்றும் ஓட்டம், நடை பந்தயங்கள் மாலையில் இசை நாற்காலி, தேக்கரண்டியுடன் எலுமிச்சை, பலூன் உடைத்தல் என பல போட்டிகள் நடைபெற்றன. ரங்கோலி போட்டியில் பெண்கள் வரைந்த கோலங்களை திருமதி பத்மாவதி முனிரத்னம் (5வது தெரு), திருமதி ஆர்.ஜெயந்தி (19வது தெரு), திருமதி காமாட்சி விஸ்வேஸ்வரன் (21வது தெரு), திருமதி உஷா ரங்கநாதன் (21வது தெரு) ஆகியோர் நடுவர்களாக இருந்து மதிப்பீடு செய்து உதவினார்கள். அவர்களுக்கு நமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். போட்டிகளில் பங்கேற்ற பெண்கள் அனைவரையும் உளமார பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

போட்டிகளில் முன்னணியில் வந்த முதல் மூன்று நபர்களின் விவரம்:

**<u>ரங்கோலி (கோலப்) போட்டி:</u>**

1. எஸ்.ஹேமமாலினி, 6/16, 11வது தெரு (மதிப்பெண் - 78/80)
2. யு.ரம்யாஸ்ரீ, 1/6, 7வது தெரு (மதிப்பெண் - 74/80)
3. ஆர்.தெய்வநாயகி, 5/10, 22வது தெரு (மதிப்பெண் - 62/80)
   யசோதா தினகரன், 5, 4வது தெரு (மதிப்பெண் - 62/80)
   ஜெ.ரமா, 8/33, 2வது பிரதான சாலை (மதிப்பெண் - 62/80)

**<u>50 மீட்டர் ஓட்ட பந்தயம்</u>**

**பிரிவு I : 20 முதல் 35 வயது வரை**

1 லலிதா, 11/8, 13வது தெரு
2 புஷ்பா, 14, 13வது தெரு
3 சித்ரா பாலாஜி 18, 13வது தெரு

**பிரிவு II: 36 முதல் 50 வயது வரை**

1. வி.விமலா, 13வது தெரு
2. சித்ரா சேகர், 5, 4வது தெரு
3. வசந்தலட்சுமி, 12வது தெரு

**<u>100 மீட்டர் நடை பந்தயம்</u>**

**வயது 50க்கும் மேற்பட்டவர்கள்**

1 காமாட்சி விஸ்வேஸ்வரன், 21வது தெரு
2 லலிதா, 10வது தெரு
3 உஷா ரங்கநாதன், 21வது தெரு

**<u>இசை நாற்காலி</u>**

**பிரிவு I : வயது 20க்கும் குறைவானவர்கள்**

1. மதுமிதா, 11/8, 13வது தெரு - 8675555500
2. எம்.ஸ்ரீதேவி, 19வது தெரு 9884768969
3. எஸ்.எம்.சாஹித்யா, 11/6, 19வது தெரு - 9840680595

**பிரிவு II : 21 முதல் 35 வயது வரை**

1. சாந்தா விஜயராகவன், 18, 5வது தெரு - 9790767031
2. பி.புஷ்பா, 13வது தெரு - 9884782382
3. எம்.ஜெயசித்ரா, 11/8, 13வது தெரு - 8675555500

**<u>இசை நாற்காலி</u>**

**பிரிவு III: 36 முதல் 50 வயது வரை**

1. வி.விமலா, 13வது தெரு - 9840348084
2. ஜெயந்தி, 31/1, 19வது தெரு - 9940587549
3. எ.செல்வி, 5வது தெரு - 8056003784

**பிரிவு IV : வயது 50க்கும் மேற்பட்டவர்கள்**

1. எல்.கலாவதி, 5வது தெரு - 9677134074
2. சாரதா பாலசுப்ரமணியன், 21வது தெரு- 9444176656
3. ராஜேஸ்வரி, 11/8, 13வது தெரு 8675555500

**<u>தேக்ரண்டியில் எலுமிச்சை ஏந்தி நடத்தல்</u>**

**பிரிவு I : வயது 20க்கும் குறைவானவர்கள்**

1. மதுமிதா, 11/8, 13வது தெரு - 8675555500
2. அபிராமி, முதல் பிரதான சாலை - 9444182087
3. டி.வித்யா, 10/4, 5வது தெரு - 7667540976

**பிரிவு II : 21 முதல் 35 வயது வரை**

1. சாந்தா விஜயராகவன், 18, 5வது தெரு - 9790767031
2. சிவகாமி, 3/2, 11வது தெரு - 9789382555
3. மோகனா, 3/2,11வது தெரு - 9789382555

**பிரிவு III: 36 முதல் 50 வயது வரை**

1. தமிழ்ச்செல்வி, 13வது தெரு - 938030617
2. சித்ரா சேகர், 5, 4வது தெரு - 9941278737
3. செல்வி, 12, 5வது தெரு - 8056003784

**<u>பலூன் உடைத்தல்</u>**

1. த.கலைச்செல்வி, 10/4, 5வது தெரு - 8015429760
2. மோகனா, 3/2,11வது தெரு - 9789382555
3. பி.புஷ்பா, 13வது தெரு - 9884782382

முன்னணியில் வந்த அனைவரையும் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். அனைவருக்கும் உரிய பரிசுகள் பொது நிகழ்ச்சி மேடையில் பிரமுகர்களின் முன்னிலையில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வெள்ளி விழா கொண்டாட்டங்களின் அடுத்த நிகழ்வு, **மருத்துவ முகாம்!** வரும் 24.03.2013 (ஞாயிறு) அன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை **ஜெய் நகர் சமூகநல கூடத்தில்** நடைபெறும்.

**மருத்துவ முகாமின் சிறப்பம்சங்கள்**:

- நமது பகுதியில் நீண்ட நாட்களாக மருத்துவம் பார்த்து வருபவர், பல குடும்பங்களின் நன்மதிப்பு பெற்றுள்ள திருமதி **டாக்டர் நிரஞ்சனா தேவி அவர்கள்** எலும்பு சத்து குறைபாடு பரிசோதனை, இரத்த சோகை பரிசோதனை - பெண்கள் அனைவரும் அவசியமாக மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகள் - உள்ளிட்ட பரிசோதனைகளை செய்து மருந்துகளும் வழங்க இசைந்துள்ளார்கள்;
- **அகர்வால் கண் மருத்துவமனை** சார்பில் கண் பரிசோதனை செய்ய ஒப்புதல் தந்துள்ளார்கள்;
- **மோகன் மருத்துவமனை** சார்பில் நீரிழிவு சோதனை செய்ய ஒப்புதல் தந்துள்ளார்கள்;
- **பில்ரோத் மருத்துவமனை**யிலிருந்து அதன் **முதன்மை மருத்துவர் டாக்டர் சி.ராஜேந்திரன் அவர்கள்** கலந்து கொள்ள இசைந்துள்ளார்;
- ஜெய் நகர் வள்ளுவர் சாலையில் உள்ள **ஸ்ரீ அருள் முருகன் மெடிக்கல்ஸ்** சார்பிலும் நமது மருத்துவ முகாமில் கலந்து கொள்கிறார்கள்;
- இவை தவிர ரத்த அழுத்தம், ரத்தப் பிரிவு அறிவித்தல், ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு அறிவித்தல் போன்ற பொது பரிசோதனைகளும் செய்து தரப்படும்;
- அது மட்டுமல்ல கண் தானம் உள்ளிட்ட உடல் உறுப்பு தானம் செய்யவும், உடல் தானம் செய்யவும் விரும்பும் உயர்குணம் படைத்த நண்பர்களுக்கு படிவங்கள் தந்து பதிவுக்கான ஏற்பாடு செய்து தரப்படும்.

முழுமையான விவரங்கள் நோட்டீஸ் மூலமாக பின்னர் தெரிவிக்கப்படும். பகுதி வாழ் மக்கள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்திக்கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அன்மையில் நம் பகுதியில் நடைபெற்றுள்ள மேம்பாட்டு பணிகள்:**

22வது தெருவில் விரிவாக்கப்பகுதியில் சிமெண்ட் சாலை போட்டு முடிக்கப்பட்டுள்ளது. தயாரிப்பு பணிகளுக்காக சாலையை சமன் படுத்தி செப்பனிட சற்று அதிக நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த காலகட்டத்தில் அப்பகுதியில் குடியிருந்தோர் வாகன பயன்பாட்டில் கொஞ்சம் சிரமத்தை சந்திக்க வேண்டியிருந்தாலும் தற்போது ஒரு அழகான சிமெண்ட் சாலை உருவாகியுள்ளது. வேலையை முடித்து கொடுத்த மாநகராட்சி அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சிமெண்ட் சாலைக்கான செலவை தனது வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கி தந்து உதவிய நமது *மாமன்ற உறுப்பினர் திரு* **மலைராஜன்** *அவர்களுக்கு* நமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அழுத்தம் குறைவான குடிநீர் வினியோகத்தால் மேற்கு ஜெய் நகர் தெருக்களில் பல வீடுகளுக்கு சம்ப் - களில் தண்ணீர் அறவே விழவில்லை. பிரச்னை உரிய அதிகாரிகளிடம் எடுத்துரைத்தப்பின் தற்போது நிலைமை சற்று சீரடைந்துள்ளது.

தெருவிளக்குகள் சீராகவே பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாமும் தினந்தோறும் அனைத்து தெருக்களிலும் சுற்றி வந்து எரியாத விளக்குகள் குறித்து தெரிவித்ததும் சரிசெய்யப்படுகின்றன. மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு அலுவலர்களையும், இளநிலை பொறியாளர் அவர்களையும் நன்றியுடன் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

நமது கமிட்டி உறுப்பினர்கள் நாள் தவறாமல் பின் தொடர்வதால், சிற்சில குறைகள் அவ்வப்போது குறிப்பிடப்பட்டாலும், குப்பைகள் அகற்றும் பணி அனைவரும் பாராட்டும் வகையில் நடைபெற்று வருகிறது. இதை **சீர்குலைக்க, சங்க செயல்பாட்டுக்கு எதிராக செயல்பட, சில சக்திகள்** முயற்சிக்கின்றன. இதை முறியடிக்க உங்களின் உதவி தேவைப்பட்டால் சுற்றுப்புற தூய்மையை கருதி சங்கத்துடன் கரம் கோர்த்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காவல் துறையினர் இரவு பகல் பாராமல் ஜெய் நகர் தெருக்களில் ரோந்தில் ஈடுப்பட்டு வந்தாலும் ஓரிரு சங்கிலி பறிப்பு சம்பவங்கள் அண்மையில் நடந்தேறியுள்ளன. தற்போது கே.10 கோயம்பேடு காவல் நிலையம் இரண்டாக பிரிக்கப்பட்டு கே.11 காவல் நிலையம் துவக்கப்பட்டு, CMBT பஸ் நிலையத்தில் இயங்குகிறது. நமது ஜெய் நகர் கே.11 பராமரிப்பின் கீழ் வந்துள்ளது. புதிய ஆய்வாளர் திரு சாம் வின்சென்ட் அவர்களை சந்தித்து பேசியதில், ஜெய் நகரில் ஆங்காங்கே நான்கைந்து இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் சங்கத்தின் சார்ப்பில் பொருத்தித் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ஆகும் செலவினை மனதில் கொண்டு 'உறுப்பினர்களை கலந்தாலோசித்து தெரிவிக்கிறோம்' என்று சொல்லிவிட்டு வந்துள்ளோம். உங்களது கருத்துக்களை எதிர்ப்பார்க்கிறோம்.

செயற்குழுவின் சார்ப்பில்,

**N.சிட்டிபாபு**
செயலாளர் - 9444979353

**L.லக்ஷ்மிநாராயணன்**
தலைவர் - 9381000554